


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (10.2.2025) முகாம் அலுவலகத்தில், ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வி.சி. சந்திரகுமார் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் என். நல்லசிவம் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.2.2025) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் சந்தித்துப் பேசினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.2.2025) தலைமைச் செயலகத்தில், மலேசியாவில் நடைபெற்ற மகளிருக்கான T20 கிரிக்கெட் உலகக்கோப்பை போட்டிகளில் இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு துணைபுரிந்த தமிழ்நாட்டு வீராங்கனை செல்வி கு.கமலினி அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலை அவரது பெற்றோரிடம் வழங்கினார். இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.2.2025) தலைமைச் செயலகத்தில், டெல்லியில் நடைபெற்ற முதல் கோ–கோ உலகக் கோப்பை ஆடவர் பிரிவில் இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு துணைபுரிந்த தமிழ்நாட்டு வீரர் வி.சுப்ரமணிக்கு உயரிய ஊக்கத் தொகையாக 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

### மலேசியா – டெல்லியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கோப்பையை வெல்வதற்குத் துணை புரிந்த

# தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர்கள் 2 பேருக்கு தலா ரூ. 25 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, பிப். 11 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலேசியாவில் நடைபெற்ற மகளிருக்கான T20 கிரிக்கெட் உலகக்கோப்பை போட்டிகளில் இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு துணைபுரிந்த தமிழ்நாட்டு வீராங்கனை செல்வி கு. கமலினி மற்றும் டெல்லியில் நடைபெற்ற முதல் கோகோ உலகக் கோப்பை ஆடவர் பிரிவில் இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு துணைபுரிந்த தமிழ்நாட்டு வீரர் வி.சுப்ரமணி ஆகியோருக்கு உயரிய ஊக்கத் தொகையாக தலா 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் வழங்கினார்.**

இதுகுறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.2.2025) தலைமைச் செயலகத்தில், மலேசியாவில் நடைபெற்ற மகளிருக்கான T20 கிரிக்கெட் உலகக்கோப்பை போட்டிகளில் இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு துணை புரிந்த தமிழ்நாட்டு வீராங்கனை செல்வி கு.கமலினி அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை அவரது பெற்றோரிடம் வழங்கினார்.

மேலும், டெல்லியில் நடைபெற்ற முதல் கோ–கோ உலகக் கோப்பை ஆடவர் பிரிவில் இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு துணைபுரிந்த தமிழ்நாட்டு வீரர் வி.சுப்ரமணி அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், மலேசியாவில் 19 வயதிற்குட்பட்ட மகளிருக்கான T20 கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டிகள் ஜனவரி 18 முதல் பிப்ரவரி 2 வரை நடைபெற்றன. இப்போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த செல்வி

கு.கமலினி இந்திய அணியில் இடம் பெற்றிருந்தார். அவர்தான் விளையாடிய ஏழு போட்டிகளில் ஒரு அரைச்சதம், 143 ரன்கள்.

2 கேட்சுகள், 4 ஸ்டம்பிங் என நிகழ்த்தி அசாத்திய சாதனைகள் புரிந்துள்ளார். இந்தப் போட்டிகளில் செல்வி கு. கமலினி அவர்களின் பங்களிப்பால் இந்திய அணி கோப்பையை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.

மேலும், தில்லியில் நடைபெற்ற முதல் கோ–கோ உலகக் கோப்பை போட்டிகள் ஜனவரி 13 முதல் ஜனவரி 19, 2025 வரை நடைபெற்றன. இப்போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த திரு. வி. சுப்ரமணி அவர்கள் அபாரமாக விளையாடியதற்காக "சிறந்த தொடு தாக்கு வீரர் விருது" (Best Attacker Award) வென்றார். இறுதிப் போட்டியில் நேபாள அணியை 5436 என்ற புள்ளிக்கணக்கில் தோற்கடித்து, இந்திய அணி கோ–கோ உலகக் கோப்பையை வென்றது. இந்தப் போட்டிகளில் சுப்ரமணி அவர்களின் பங்களிப்பால் இந்திய அணி கோப்பையை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.

கிரிக்கெட் வீராங்கனை செல்வி கு. கமலினி மற்றும் கோகோ வீரர் திரு. வி. சுப்ரமணி ஆகியோரது சாதனைகளைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில், முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் செல்வி கு. கமலினி மற்றும் வி. சுப்ரமணி ஆகியோருக்கு உயரிய ஊக்கத்தொகையாக தலா 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி பாராட்டினார்.

இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி விக்கிரவாண்டி பேருந்து நிலையம் அருகில் புதிய உழவர் சந்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டினார். மாவட்ட ஆட்சித்தலைவர் சேக் அப்துல் ரகுமான், மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி , சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா. இலட்சுமணன், பேரூராட்சி மன்றத் தலைவர் அப்துல் சலாம், பேரூராட்சி , துணைத் தலைவர் ச.பாலாஜி, ஒன்றியச் செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, வேம்பி.ஜெ.ரவி, ஜெ.ஜெயபால், க.மும்மூர்த்தி, கல்பட்டு வி.ராஜா, ஆர்.முருகன், ஆர்.பி. முருகன், பேரூர் செயலாளர் நைனா முகம்மது, ஒன்றிய குழு தலைவர்கள் சங்கீதா அரசி ரவி துரை, கலைச்செல்வி, துணைத் தலைவர் ஜீவிதா மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், ரவி உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சர் சி.வெ.கணேசன் மற்றும், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ., துரை.ரவிக்குமார் எம்.பி. ஆகியோர்கள், நேற்று முன்தினம் (9.2.2025) உளுந்தூர்பேட்டை வேதாந்தா பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற, திருநாவலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளரும், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினருமான ஜி.ஆர்.வசந்தவேல் வ.குணசுந்தரி ஆகியோரின் இல்ல திருமண விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு, மணமக்கள் மருத்துவர் வ.சந்திரபோஸ் மற்றும் மருத்துவர் உ.சுவேதா ஆகியோரை வாழ்த்தினர்.